DINAKARAN

17 SEP 2022

PAGE 12



க்யூட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள்

# புதுவை பல்கலையில் விண்ணப்பிக்கலாம்

## உதவி பதிவாளர் தகவல்

புதுச்சேரி, செப். 17: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தேசிய தேர்வு முகமை (என்டிஏ) மூலம் பல்கலைக்கழகநுழைவுத்தேர்வு (யூஜி-க்யூட்)-2022 ஜூலை 15ம் தேதி முதல் ஆகஸ்ட் 30ம் தேதி வரை நடத்தப்பட்டது. இத்தேர்வு முடிவுகளை தேசிய தேர்வு முகமை அண்மையில் வெளியிட்டுள்ளது. இத்தேர்வில் பங்கேற்ற மாணவர்கள், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் படிக்க தகுதியுடைவர்கள். 2022-23ம் கல்வி ஆண்டில் புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு ஒருங்கிணைந்த முதுகலை படிப்புகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பங்கள் https://www.pondiuni.edu.in/admissions-2022-23/ என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் விரைவில் வெளியிடப்படும். மேலும் விவரங்கள், தகுதிகள், பாடப்பிரிவுகள் அனைத்து தகவல்களும் பல்கலைக்கழக இணையதளத்தில் பார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DINAMALAR

17 SEP 2022

PAGE 3

# மாணவர் சேர்க்கை நடைமுறை துவக்கம் புதுச்சேரி பல்கலைக்கழகம் அறிவிப்பு

**புதுச்சேரி, செப். 17–**

கியூட் நுழைவு தேர்வு முடிவு வெளியான நிலையில், புதுச்சேரி பல்கலைக்கழகம் மாணவர் சேர்க்கை நடைமுறையை துவக்கியுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள 10 ஐந்தாண்டு ஒருங்கிணைந்த படிப்புகளுக்கும் மட்டும், மத்திய பல்கலைக்கழகங்களுக்கான கியூட் நுழைவு தேர்வு மூலம் மாணவர் சேர்க்கை நடக்கும் என அறிவிக்கப்பட்டு விண்ணப்பம் பெறப்பட்டது. அதன் பிறகு, மீதமுள்ள முதுநிலை படிப்புகளும் கியூட் தேர்வு மூலமே சேர்க்கை நடத்தப்படும் என அறிவித்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

நாடு முழுவதும் இருந்து மாணவ மாணவிகள் போட்டிபோட்டிக் கொண்டு விண்ணப்பித்தனர். பல்கலைக்கழகத்தில் மொத்தம் 3,700 முதுநிலை சீட்டுகள் உள்ளன. இந்த படிப்புகளுக்கு சராசரியாக ஆண்டிற்கு 40 ஆயிரம் விண்ணப்பங்கள் மட்டுமே வரும்.

ஆனால், இந்தாண்டு கியூட் நுழைவு தேர்வில் புதுச்சேரி பல்கலைக்கழகம் இணைக்கப்பட்டதால், மொத்தமுள்ள 3,700 சீட்டுகளுக்கு 3 லட்சத்து 86 ஆயிரம் விண்ணப்பங்கள் குவிந்துள்ளன.

பிளஸ்2 முடித்த மாணவர்களுக்கான ஐந்தாண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்பிற்கு 97 ஆயிரம் விண்ணப்பங்களும், ஏனைய முதுநிலை படிப்புகளுக்கு 2,89,000 விண்ணப்பங்கள் குவிந்துள்ளது.

இவர்களுக்கான கியூட் நுழைவு தேர்வு ஜூலை 15ம் தேதி முதல் ஆகஸ்ட் 30ம் தேதி வரை நடந்து ரிசல்ட் வெளியாகியுள்ள சூழ்நிலையில், மாணவர் சேர்க்கை நடைமுறை புதுச்சேரி பல்கலைக்கழகம் துவங்கியுள்ளது.

இதுதொடர்பாக, பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு முதுநிலை படிப்புகளில் சேருவதற்காக தேசிய தேர்வு முகமையின் நுழைவு தேர்வினை, கடந்த ஜூலை 15ம் தேதி முதல் ஆகஸ்ட் 30ம் தேதி வரை எழுதினர்.

இவர்களுக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்பம் www.pondiuni.edu.in/admissions-2022–23 என்ற இணையதள முகவரியில் விரைவில் வெளியிடப்படும். மாணவர் சேர்க்கை, தகுதி விபரங்களை பல்கலைக்கழக தகவல் குறிப்பேட்டை பார்த்து தெரிந்து கொள்ளலாம். அண்மை தகவல்களுக்கு புதுச்சேரி பல்கலைக்கழகத்தினை இணைய முகவரியை பார்க்கவும்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.